CC. No.288/2025

நாள் :-10.02.2026

அ.சா. 1: ச. சரவணகோபால்

(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்).

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

1ம்எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

ஆசிரியர் சிக்கன கடன் சங்கத்தில் கடன் கொடுப்பது காசோலை மூலமாகத்தான் என்றால் சரிதான். இந்த சங்கத்தில் அரசு பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கு மட்டும்தான் கடன் கொடுக்கப்படும் என்றால் சரிதான். அந்த கடன்கள் கடன் பெற்ற ஆசிரியர்கள் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு வட்டார கல்வி அலுவலர், முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்திலிருந்து காசோலை மூலமாகத்தான் பெறப்படும் சரிதான். சங்கத்தின் மொத்த வரவு, செலவுகளும் காசோலை மூலமாகத்தான் பரிவர்த்தனை செய்யப்படும் என்றால் சரிதான். கடன் பேரேடு, கடன் நிலுவை பேரேடு அதனை எழுதும் பொறுப்பு 1ம் எதிரியுடையது இல்லை என்றால் duties and responsibilities சங்கத் தீர்மானத்தின் படி நடக்கும், இந்த சங்கத்தில் யார் பொறுப்பு என்று என்னால் தற்போது சொல்லமுடியாது. சங்கத்தை பொறுத்தவரை ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை செய்யப்படும். 2010 முதல் 2017 வரை ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கப்பட்டுள்ள தணிக்கை அறிக்கையில் குறைபாடுகள் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான ஒவ்வொரு ஆண்டும் எடுக்கக்கூடிய தணிக்கை அறிக்கையில் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லை என்றால் நான் 2016 லிருந்து துணை பதிவாளராக பணிபுரிந்தேன். அதனால் தான் எனக்கு தெரியாது. எனக்கு 2010 முதல் 2015 வரை வருட வருடம் நடந்த தணிக்கை அறிக்கையை நான் பார்வையிட்டேனா என்றால் நான் பார்வையிடவில்லை. ஒரு நபருக்கு கடன் கொடுக்கவேண்டும் என்றால் நிர்வாகக் குழுவின் பரிந்துரைப்படி கொடுக்கமுடியும் என்றால் சரிதான். நான் 2014 முதல் 2015 வரை தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் தான் விசாரணை அதிகாரியை நியமித்தேன். கடன் நிலுவை பதிவேடு 1ம் எதிரியால் பராமரிக்கப்படவில்லை என்றும், எழுதப்படவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி

CJM, MAYILADUTHURAI.

சீனிவாசன் 2015-ஆண்டிலேயே ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அவர் ஓய்வு பெறும் வரை அவர் மீது எந்த குற்றச்சாட்டும், தணிக்கை அதிகாரியோ, 81 விசாரணை அதிகாரியோ பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அவர் எந்த குற்றச்செயல்களிலும் ஈடுபடவில்லை என்பதால் தான் ஓய்வுபெற அனுமதிக்கப்பட்டார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. கோப்புகளை ஆராயமல் விசாரணைக்கு உத்தவிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பழைய கடன் அடைக்கப்பட்ட பிறகு தான், புதிய கடன் வழங்கப்படும் என்றால் சரிதான். 1ம் எதிரிக்கு கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கும் அதிகாரம் கிடையாது என்றால் சங்கத்துடைய தீர்மானத்தை பார்த்தால் தான் சொல்லமுடியும். சங்கத்திலிருந்து எந்தவொரு தொகையும் ரொக்கமாக வெளியேற்ற இயலாது என்றால் சரிதான். சம்பளத்தில் தவணைத்தொகையை AEO அலுவலகத்தில் பிடிக்கவில்லை என்றால் பயனாளி ரொக்கமாக நேரில் செலுத்துவார். அவ்வாறு நேரில் செலுத்தப்பட்டதாகவும், அதில் உள்ள தொகை கையாடல் செய்யப்பட்டதாகவும், தணிக்கையில் அறிக்கையிலோ, 81 விசாரணை அறிக்கையிலோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எந்தவித முகாந்திரமும் இல்லாமல், சரிவர கோப்புகளை ஆராயமல் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாங்கள் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு 1ம் எதிரி எந்தவித குற்றச்செயலில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

10/12/24

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.2 நாள் 10.02.2026

| CC. No. | 288/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | பு. மீனாட்சி | த/பெ. | புண்ணியமூர்த்தி |
| வயது | 50/2026 | தொழில் | கூட்டுறவு தணிக்கை அலுவலர் |
| கிராமம் | சீர்காழி | தாலுக்கா | சீர்காழி |

(எதிரிகள் ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது கூட்டுறவு தணிக்கை அலுவலராக கும்பகோணம் சரகத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் OS52 சீர்காழி ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்தில் 2014 –2015 ஆண்டிற்கான இறுதி தணிக்கை மேற்கொண்ட போது உறுப்பினர்கள் கடன்களில் முறைகேடு நடந்தது கண்டறியப்பட்டு தனி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. 2014–2015–க்கான தணிக்கை செய்தபோது, உறுப்பினர்களின் கடன் பேரேட்டு நிலுவை பட்டியலுடன் ஒப்பிட்டு சரிபார்த்தபோது கடன் பேரேட்டில் கடன் நிலுவையை திருத்தம் செய்து மாற்றப்பட்டுள்ளதை கண்டறிந்து 2014–2015 தணிக்கை அறிக்கையின் மீது தனி அறிக்கையை சமர்ப்பித்தேன். சங்கத்தின் கடன் பேரேட்டு நிலுவை பட்டியலுடன் ஒப்பிட்டபோது கீழ்கண்ட படி வழங்கியுள்ள கடன்களில் தொகையை திருத்தம் செய்து கூடுதலாக கடன் வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன் எண்.3202, நாள். 03.12.2005 எஸ். மகாராணிக்கு கடன் ரூ.1,00,000/– வழங்கியுள்ளதை ரூ.2,00,000/– என கடன் பேரேட்டை திருத்தியும், 2010 – 2011 கடன் பேரேட்டின் நிலுவை பட்டியலில் ரூ.1,62,850/– என போலியாக குறிப்பிட்டும், 2011–2012–ன் நிலுவை பட்டியலில் நிலுவையை மறைத்தும், 2012–2013, 2013–2014, 2014–

CJM, MAYILADUTHURAI.

10/02/26

2015-க்கான நிலுவை பட்டியலில் ரூ.1,62,850/- நிலுவை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், கடன் பேரேட்டின் படி ரூ.62,850/- நிலுவை உள்ளது. கடன் பேரேடு எண்.7-ல் 45வது பக்கத்தில் ரூ.1,00,000/- கடன் வழங்கப்பட்டுள்ளது. அதில் கடன் நிலுவையில் உள்ளதில் வெள்ளை மை வைத்து திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. 2010 - 2011-க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 129 **அ.சா.ஆ.6** ஆகும். 2012 - 2013-க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 215 **அ.சா.ஆ.7**ஆகும். 2013 - 2014 -க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 1 **அ.சா.ஆ.8**ஆகும். 2014 - 2015-க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 463 **அ.சா.ஆ.9**ஆகும். கடன் பேரேடு எண்.7-ல் பக்கம் 45 **அ.சா.ஆ.10** ஆகும்.

கடன் எண்.3472, நாள்.10.12.2007 டி. சிவசாமிக்கு ரூ,1,00,000/- கடன் வழங்கியுள்ளதை ரூ.2,00,000/- என கடன் பேரேட்டில் திருத்தியும் , 2010-2011-க்கான கடன் பேரேடு நிலுவை பட்டியலில் ரூ.1,39,570/- என குறிப்பிட்டும், 2011-2012-க்கான நிலுவையை பட்டியலில் மறைத்தும், 2012-2013, 2013-2014 மற்றும் 2014-2015-க்கான நிலுவை பட்டியலில் ரூ.1,24,170/- நிலுவை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், கடன் பேரேட்டின் படி ரூ.24,170/- நிலுவை காட்டப்பட்டுள்ளது. கடன் பேரேடு எண்.8-ல் 114வது பக்கத்தில் ரூ.1,00,000/- கடன் வழங்கப்பட்டுள்ளது. அதில் கடன் நிலுவையில் உள்ளதில் வெள்ளை மை வைத்து திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. 2010 - 2011-க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 133 **அ.சா.ஆ.11** ஆகும் , 2012 - 2013-க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 217 **அ.சா.ஆ.12** ஆகும், 2013 - 2014 -க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 1 **அ.சா.ஆ.13** ஆகும், 2014 - 2015-க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 465 **அ.சா.ஆ.14** ஆகும், கடன் பேரேடு எண்.8-ல் 114வது பக்கம் **அ.சா.ஆ.15** ஆகும்.

கடன் எண். 3594, நாள். 14.11.2008 ஜெ.பத்மாவதிக்கு ரூ.2,00,000/- கடன் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், கடன் பேரேட்டில் ரூ.3,00,000/- நிலுவை என குறிப்பிட்டும், 2011-2012-க்கான நிலுவை பட்டியலில்

CJM, MAYILADUTHURAI.

10/02/26

மறைக்கப்பட்டுள்ளது. ஆனால் கடன் பேரேட்டின் படி 2011-2012 -ல் ரூ.1,50,700/- நிலுவை இருந்ததை 24.05.2011-ல் உளவடை செய்து கடன் முடிக்கப்பட்டு புதிய கடன் எண்.3952-ன் படி ரூ.3,50,000/- அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த புதிய கடன் எண்.3952-க்கான கடன் பதிவேடு எண்.10 பக்கம் 185 **அ.சா.ஆ.16.** 2012-2013-ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.2,93,000/- நிலுவையும், 2013-2014 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.2,57,000 நிலுவையும் மற்றும் 2014-2015-ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.2,21,000/- நிலுவை உள்ளதாக பட்டியல் பட காண்பிக்கப்பட்டுள்ளது. பழைய கடன் எண்.3594-ல் ரூ.1,00,000/- அதிகரித்து காட்டியது மட்டும், 2012-2013, 2013-2014, 2014-2015 கடன் நிலுவை தொடர்ந்து நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடன் பேரேடு எண்.8-ல் 236வது பக்கத்தில் ரூ.2,00,000/- கடன் வழங்கப்பட்டுள்ளது. அதில் வெள்ளை மை வைத்து திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. 2010 - 2011-க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 137 **அ.சா.ஆ.17** ஆகும். 2012 - 2013-க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 219 **அ.சா.ஆ.18** ஆகும், 2013 - 2014 -க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 1 **அ.சா.ஆ.19** ஆகும், 2014 - 2015-க்கான கடன் பேரேட்டின் நிலுவை பட்டியல் பக்கம் 465**அ.சா.ஆ.20** ஆகும், கடன் பேரேடு எண்.8-ல் 236வது பக்கம் **அ.சா.ஆ.21** ஆகும்.

மேலும் கீழ்கண்ட கடன்களில் கடன் முடிவு கட்டிய பிறகும்2012-2013 முதல் 2014-2015 வரை உள்ள நிலுவை பட்டியலில் போலியாக நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது.

1. கடன் எண்.3622 பி. பொற்செல்வி 23.12.2008-ல் ரூ.2,00,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி ரூ.1,45,600/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டின் படி 05.10.2012-ல் கடன் முடிவுக்கட்டப்ட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

2.கடன் எண்.3891 ஜி. தியாகராஜன் 06.12.2010-ல் ரூ.3,50,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை

CJM, MAYILADUTHURAI.

10/02/26

பட்டியல் படி ரூ.3000/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டின் படி 20.03.2013-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

3. கடன் எண்.3824 எஸ். முத்துலெட்சுமி 09.06.2010-ல் ரூ.2,00,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி ரூ.1,44,000/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டின் படி 21.08.2012-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

4. கடன் எண்.3888 எம். பாலமுருகன் 06.12.2010-ல் ரூ.3,50,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி ரூ.3,11,000/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டின் படி 31.01.2013-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

5. கடன் எண்.3920 வி. தீனாதயாளன் 18.03.2011-ல் ரூ.3,50,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி ரூ.2,93,000/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டின் படி 25.10.2012-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

6. கடன் எண்.3808 ஆர். தன்ராஜ் 30.04.2010-ல் ரூ.3,50,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி ரூ.1,48,000/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டின் படி 27.03.2013-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் கீழ்கண்ட கடன்களில் நிலுவை நின்ற தொகைகள் 27.03.2013-ல் கடன்பேரேட்டில் முடிவு கட்டியதாக குறிப்பிட்டும், கடன் நிலுவை பட்டியலில் 2012-2013 முதல் 2014-2015 வரை உள்ள நிலுவையில் போலியாக காண்பிக்கப்பட்டுள்ளது.

1. கடன் எண்.3548 பி. நளினி 20.06.2008-ல் ரூ.2,00,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி 26.03.2013-ல் ரூ.70,600/- என நிலுவை

CJM, MAYILADUTHURAI.

10/02/26

காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டில் மோசடியாக ரூ.70,600/- என 27.03.2013-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

2. கடன் எண்.3859 கே. கஜேந்திரன் 27.09.2010-ல் ரூ.2,00,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி 26.03.2013-ல் ரூ.1,42,000/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டில் மோசடியாக ரூ.1,42,000/- என 27.03.2013-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது

3. கடன் எண்.3905 ஆர். செல்வராணி 05.2011-ல் ரூ.2,00,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி 26.03.2013-ல் ரூ.1,50,000/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டில் மோசடியாக ரூ.1,50,000/- என 27.03.2013-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

4. கடன் எண்.3941 ஆர். சாந்தி 31.03.2011-ல் ரூ.2,00,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி 26.03.2013-ல் ரூ.1,60,850/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டில் மோசடியாக ரூ.1,60,850/- என 27.03.2013-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது

5. கடன் எண்.3956 ஆர். ஜெயந்தி 24.05.2011-ல் ரூ.3,50,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி 26.03.2013-ல் ரூ.2,84,000/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டில் மோசடியாக ரூ.2,84,000/- என 27.03.2013-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது

6. கடன் எண்.3957 டி. ரவிச்சந்திரன் 24.05.2011-ல் ரூ.3,50,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி 26.03.2013-ல் ரூ.2,84,000/- என நிலுவை

CJM, MAYILADUTHURAI.

10/02/26

காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டில் மோசடியாக ரூ.2,84,000/- என 27.03.2013-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது

7. கடன் எண்.4012 ஆர். வளர்மதி 21.10.2011-ல் ரூ.3,50,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி 26.03.2013-ல் ரூ.2,73,500/- என நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடன்பேரேட்டில் மோசடியாக ரூ.ரூ.2,73,500/- என 27.03.2013-ல் கடன் முடிவுக்கட்டப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட கடனில் நிலுவையில் நின்ற தொகையை 07.09.2013-ல் முடிவு கட்டிய பிறகும் 2012-2013, 2013-2014 மற்றும் 2014-2015 நிலுவை பட்டியலில் போலியாக நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது.

1. கடன் எண்.4021 வெங்கட்ராமன் 21.10.2011-ல் ரூ.2,00,000/- கடன் வழங்கப்பட்டு 2014-2015 தணிக்கை ஆண்டின் இறுதியில் நிலுவை பட்டியல் படி 21.03.2012-ல் ரூ.1,86,000/- என நிலுவை காண்பிக்கப்பட்டு, 2012-2013-ல் ரூ.41,800 வசூல் செய்யப்பட்டும், நிலுவை பட்டியல் படி ரூ.1,86,000/- நிலுவையாக காட்டப்பட்டு வருகிறது.

மேற்படி தொகைகள் தினபேரேடு மூலம் வரவானதை அசல் கணக்கான பொது பேரேட்டில் எடுத்துக்கொண்டபோதும் வித்தியாசம் ஏதும் இல்லாமல் கடன்பேரேடு நிலுவைப்பட்டியல் சரிசெய்து தணிக்கைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. கடன் பேரேடு நிலுவைப்பட்டியலில் உள்ள நிலுவை, கடன் பேரேட்டுடன் ஒத்திசைவு செய்யாதது எனது 2014-2015 தணிக்கையின் போது தெரியவந்தது. ரொக்கம், காசோலை மற்றும் ஈ.சி.எஸ் மூலம் வரவாகும் தொகை துணை தினபேரேட்டில் பதிந்து அதன்படி கடன் பேரேடுகளில் வரவு வைக்காதது எனது தணிக்கையில் தெரியவந்தது. செயலர் சீனிவாசன், முதல் நிலை எழுத்தர் மனோகரன் ஆகியோர் உறுப்பினர்களிடம் ரொக்கமாக வசூல் செய்த தொகையை சங்க கணக்குகளில் வரவு வைக்காமல் உறுப்பினர்களின் பெயரில் இரண்டு கடன் நிலுவை காண்பித்து, வழங்கிய கடனை திருத்தம் செய்து, அதிகப்படுத்தி, நிலுவை காண்பித்து முந்தைய ஆண்டுகளின் வரவுகளை

CJM, MAYILADUTHURAI.

10/02/26

பொய்யாக பட்டியலில் காண்பித்து சங்க நிதியை மோசடி செய்தது தெரியவந்தது. சங்கப் பணியாளர்கள் சான்றளித்தப்படி கடன் நிலுவை பட்டியலைக்கொண்டு எனது தணிக்கை முடித்தேன். தாங்கள் காட்டும் 2013-2014 மற்றும் 2014-2015 தணிக்கை அறிக்கை என்னால் சமர்ப்பிக்கப்பட்டதுதான். அந்த தணிக்கை அறிக்கைகள் முறையே **அ.சா.ஆ.22** மற்றும் **அ.சா.ஆ.23** ஆகும். என்னை கூட்டுறவு விசாரணை அதிகாரி விசாரித்தார். தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81-ன் கீழான விசாரணை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலம் இதுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.24** ஆகும். வணிக குற்றப்புலனாய்வு பிரிவு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

( எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

10/02/26

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

10/2/26

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.